*Available online at:* [http://www.advancedscientificjournal.com](http://www.advancedscientificjournal.com)
[http://www.krishmapublication.com](http://www.krishmapublication.com)
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 526- 531, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# விழுப்புரம் மாவட்ட பெருங்கற்காலத் தடையங்கள்

**முனைவர் ஏ. ஜீவா,**
*வரலாற்றுத் துறை தலைவர்,தூய இருதைய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேரணி, திண்டிவனம்.*

***ஆய்வுச் சுருக்கம்***

மலைவளமும், மருதநிலவளமும் ஒருங்கே நிறைந்த விழுப்புரம் மாவட்டத்தில் பழைய கற்கால மனிதர்களையும், புதிய கற்கால மனிதர்களையும் தொடர்ந்து பெருங்கற்காலத்தைச் சேர்ந்த மனிதர்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் பெருங்கற் சின்னங்களாகவும், ஈமத்தாழிகளாகவும், பாறை ஓவியங்களாகவும் விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன. கீழ்வாலை, கொல்லூர், ஜம்பை போன்ற இடங்களில் கிடைத்துள்ள கருப்பு, சிவப்பு பானை ஓடுகள். செத்தவரை, கீழ்வாலை, ஓதியத்தூர், பாடியேந்தல், கொல்லூர், ஆலம்பாடி, நெகனூர்பட்டி, நாயனூர் முதலிய இடங்களில் காணப்படும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த பாறை ஓவியங்கள் மற்றும் ஆரோவில், திருவக்கரை, கொல்லூர், நாயனூர், உடையாநத்தம், தேவனூர், தேவதானம்பேட்டை போன்ற இடங்களில் காணப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களின் வாயிலாகவும் இம்மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொல்லியல் அகழாய்வுகளின் வாயிலாக கிடைக்கப்பெற்ற பானை ஓடுகள், ஆயுதங்கள், அணிகலன்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்தி விட்டுச்சென்ற பொருட்களின் மூலமாகவும் இப்பகுதியில் வாழ்ந்த பெருங்கற்கால மனிதர்களைப் பற்றியும் அவர்கள் விட்டுச்சென்ற தடையங்களையும் அறியமுடிகிறது.

## ***முன்னுரை***

### **ஈமச்சின்னங்கள்**

அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யும் போது இறந்தவர்கள் மறு உலகத்தில் வாழ்வார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களை தாழியினுள் வைத்து புதைக்கும் போது அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் அவர்களுக்கு விருப்பமான உணவுப்பொருட்களையும் உள்ளே வைத்து புதைத்துள்ளனர். பெருங்கற்கால மனிதர்கள் தாங்கள் வாழ்விடங்களுக்கு சற்றே தூரம் தள்ளி இறந்த மனிதர்களை அடக்கம் செய்யும் முறையைக் கையாண்டனர். இறந்த மனிதர்களுக்கு பெரிய அளவிலான கற்களைக் கொண்டு கல்லறைகளை ஏற்படுத்தும் வழக்கம் இவர்களிடையே காணப்பட்டதால் இது பெருங்கற்காலம் என்று குறிப்பிடப்படுகின்றது.

மேலும் இரும்பின் பயனை அவர்கள் அறிந்திருந்ததோடு இரும்பினாலான வீட்டு உபயோகப் பொருட்கள், விலங்குகளை வேட்டையாட உதவிய கருவிகள் மற்றும் சமயத்தொடர்புடைய பொருட்களையும் செய்யத் தெரிந்திருந்தனர். எனவே தான் இதனை ‘இரும்பு காலம்’ எனவும் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழகத்தில்



*©2023 by* KRISHMA PUBLICATION 

ஆதிச்சநல்லூரில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் வாயிலாக வெளிக்கொணரப்பட்ட பெருங்கற்கால 'முதுமக்கள் தாழிகள்' வரலற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றன. விழுப்புரம் மாவட்டத்தின் பல இடங்களில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த இறந்தவர்களின் ஈமத்தாழிகள், கல்வட்டம், கற்பதுக்கை, கற்குவியல், தாய்தெய்வ உருவம், மற்றும் கருப்பு சிவப்பு நிற பானை ஓடுகள் போன்றவை காணப்படுகின்றன. இவை அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் சவ அடக்கமுறை, மறு உலகவாழ்வு, உணவுமுறைகள், நம்பிக்கைகள், அணிகலன்கள் மற்றும் அவர்களின் பொழுதுபோக்குகள் போன்றவற்றைப் பற்றி அறிந்துகொள்ள முக்கியச் சான்றுகளாய் திகழ்கின்றன.

**கல்வட்டம்**

ஆழமாகக் குழித்தோண்டி அதனுள் இறந்தவர்களுடைய உடலையோ அல்லது உடல் வைக்கப்பட்ட ஈமத்தாழி மற்றும் ஈமப்போடைகளைப் புதைப்பவர் அதனுடன் அவர்கள் பயன்படுத்திய கத்திகள், அம்பு முனைகள், மணிகள், மட்கலயங்களையும் வைத்து அடக்கம் செய்வார்கள். இவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் தரைக்கு மேல் வட்ட வடிவில் கல் வட்டங்களை அமைப்பர். அவைகள் சிறியது முதல் பெரிய அளவிலான பாறைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கம். சுமார் 25 மீ விட்டம் கொண்ட பெரிய கல்வட்டங்கள் கூட ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன.

**குத்துக்கல், நெடுங்கல்**

தரைக்குக் கீழே குழிதோண்டி இறந்தவர்களை அடக்கம் செய்துவிட்டு அதன்மேல் உயரமான கற்களை நட்டு வைப்பர் இம்முறைக்குக் குத்துக்கல் அல்லது நெடுங்கல் என்று பெயர்.

**கல்பதுக்கை**

இம்முறையில் இறந்தவர்களை அடக்கம் செய்வது தரைமட்டத்திற்கு மேல் அமையும். இயற்கையில் கிடைக்கும் பெரிய கற்களைக் கொண்டு நான்கு புறங்களிலும் சுவர்போல் அமைத்து ஒரு சதுரமான அல்லது நீள் சதுரமான அறை உண்டாக்கப்பட்டு அவைகளுக்கு இடையில் இறந்த உடல்களையும் ஏனைய இடுபொருட்களையும் வைத்துவிட்டு அதன் மேல் பகுதியை ஒரு பலகையான கல்லால் மூடிவிடுவர் சுற்றிலும் சுவர்போல் அமைத்துவிடுவர். இவ்வகைக் கல்பதுக்ககைகள் பெரும்பாலும் சிறு குன்றுகள், மலைமுகடுகள் போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் தேவதானம் பேட்டை மலைப்பகுதியில் இவ்வகை ஈமச்சின்னங்கள் உள்ளன.

**கல்திட்டை**

தரையைச் சிறிதளவு தோண்டி நான்கு பெரிய அளவிலான பலகைக் கற்களை ஒன்றை ஒன்று தாங்கும் முறையில் நட்டுவைத்து ஒரு அறைபோல் வடிவமைத்து அதன் மத்தியில் ஈமப் பொருட்களையும், இடு பொருட்களையும் வைத்து மேல் பகுதியை மற்றொரு பலகைக் கல்லைக் கொண்டு மூடிவிடுவர். இவ்வகை பலகைக் கற்கள் ஒன்றை ஒன்று தாங்கம் முறை ''ஸ்வஸ்திக'' வடிவம் போல் அமைக்கப்பட்டிருக்கும்.

**ஈமத்தாழிகள்**

இறந்த மனிதர்களின் உடல் அல்லது எலும்புகளை இடுபொருட்களுடன் சேர்த்து ஒரு பெரிய சுடுமண்னால் செய்யப்பட்ட தாழியில் வைத்து பூமிக்கடியில் புதைத்து அதன் மேல்பாகத்தை ஒரு மூடிக்கல்லைக் கொண்டு மூடிவிடுவர். இவ்வகையில் சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உடல்களும் ஒரே தாழியில் அடக்கம் செய்யவது அகழாய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகைத் தாழிகளை முதுமக்கள் தாழி என அழைப்பர்.

குறுகிய வாயும், சற்றே அகலமான தோள் பகுதியும் மூன்று அல்லது ஐந்து கால்களைக் கொண்ட சிறிய ஈமத்தாழியில் இறந்தவர்களின் உடலை எரித்த சாம்பலை இட்டுப்புதைத்த முறையம் கையாளப்பட்டது.

**ஈமப்பேழைகள்**

இவைகள் நீண்ட பெட்டிகளைப்போல் காட்சியுடையவை சுமார் 200 செ.மீ நீளமும் 60 செ.மீ அகலமும் கொண்டவைகள். இப்பேழைகள் மேல்பகுதி மற்றும் கீழ்பகுதி என இரண்டாகப் பிரிக்கும் வகையில் செய்யப்பட்டிருக்கம். கீழ்ப்பகுதி நான்கு முதல் 16 கால்கள் வரைத்தாங்கும் வகையில் அமைக்கப்பட்டு பெட்டிபோல் காணப்படும். இதனுள் இறந்தவர் உடலையும் இடுபொருட்களையும் வைத்து மேல்பகுதியைக் கொண்டு மூடி புதைத்துவிடுவர்.

**பாறை ஓவியங்கள்**

மலைக்குகைளிலும், காடுகளிலும் நாடோடிகளாக சுற்றித்திறிந்து வாழ்ந்த மனிதனின் உள்ளத்தில் பதிந்திருந்த கலையுணர்வே அக்கால ஓவியங்களாக உருப்பெற்றன. எழுத்தறிவு அற்ற அந்நிலையிலேயே தனது எண்ணத்தை வெளிப்படுத்த அவர்கள் மேற்கொண்ட சிறந்த முயற்சியாக இது அமைந்தது. இக்கலை இனம், நாடு என்ற பாகுபாடின்றி எல்லோராலும் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் மொழி, எழுத்துக்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தது.

குறிப்பாக தமிழகத்தில் இவ்வோவியங்கள் பெரும்பாலும் பெருங்கற்காலத்தோடு தொடர்புடையவையாகவே உள்ளன. 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகே தமிழகத்தில் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதன்முதலாக

தமிழக்கத்தில் இவ்வகையான ஓவியம் மல்லப்பாடியில் சென்னை பல்கலைக்கழகத்தின் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறையினரால் கண்டறியப்பட்டது.

**கீழ்வாலை**

இதன் பின்னர் விழுப்புரம் மாவட்டம் கீழ்வாலையில் 1982 **ஆம் ஆண்டு** பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்டன கீழ்வாலை ஓவியங்கள் சிவப்பு வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளதால் இக்குன்று 'இரத்தப்பாறை' என்றும் 'இரத்தக் குடைக்கல்' என்றும் அழைக்கப்படுடகிறது. நான்கு தொகுதிகளாக ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் குதிரையின் மீது அமர்ந்த நிலையில் ஒரு மனிதனும், குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தவாரு குதிரையை நடத்திச் செல்லும் வகையில் மற்றொரு உருவமும், இவர்கள் இருவரையும் வரவேற்கும்படி கைகளை விரித்த நிலையில் மூன்றாவதாக ஒரு உருவமும் தீட்டப்பட்டுள்ளன. இவர்களின் மூக்கு பறவையின் அலகினை போன்று காணப்படுகிறது. நடுவில் காணப்படும் மனிதனின் தலையில் மகுடம் உள்ளது. குதிரையின் மீது அமர்ந்துள்ள மனிதனின் இடையிலும், குதிரையைச் செலுத்துபவன் இடையிலும் குறுவாள் காட்டப்பட்டுள்ளது. இவையன்றி விலங்குகள், படகு, சூரியன், ஆயுதயுங்கள், வில், போன்றவை வரையப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் மற்றொரு சிறப்பு கீழ்வாலை வரி வடிவங்கள் சிந்துவெளி வரி வடிவங்களை ஒத்து காண்படுவதாகும்.

**செத்தவரை**

விழுப்புரம் மாவட்டம் செத்தவரை அய்யனார் மலையில் பாறை ஓவியங்கள் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடுக்கப்பட்டுடள்ளன. இங்கு காணப்படும் ஓவியங்களில் அழகிய மானின் ஓவியமும், நீண்ட கோலும், மீன் வடிவமும் குறிப்பிடத்தக்கவை. அதன்கீழ் தீச்சுவாலையும் காட்டப்பட்டுள்ளது. இது மானின் இறைச்சியைக் கோயில் மாட்டித் தீயில் வாட்டுடவதுபோல் உள்ளது. மேலும், எருமை, காட்டுப்பன்றி போன்ற விலங்கினங்களும் மற்றும் சில குறியீடுகளும் இங்குத் தீட்டப்பட்டுள்ளன. மனிதனின் கை விரல்கள் போன்ற ஓவியங்கள் பலவும் இங்கே உள்ளன. தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற ஓவியங்களில் இங்குதான் பழமையான மீன் வடிவ ஓவியங்கள் காணப்படுகின்றன. மான் மீன் உருவம் போன்ற உருவங்களில் வெளிக்கோடுகள் செங்காவி வண்ணத்திலும், உட்புறம், வெள்ளை வண்ணத்திலும் தீட்டப்பட்டுள்ளன. காட்டெருமையின் உருவம் முழுவதும் செங்காவி வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன.

**கொள்ளூர்**

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூருக்கு அருகில் கொள்ளூர் அமைந்துள்ளது. இவ்வூரில் மிகப்பெரிய பல்லியின் வடிவத்தைக் காணமுடிகிறது. சில ஆய்வாளர்கள் அதனை உடும்பு என்றும் குறப்பிட்டுள்ளனர். உடும்பு வேட்டைக்குரிய விலங்கு ஆகும். உடுப்பின் மாமிசம் மருந்தாகவும் பயன்படும். உடும்பு ஓவியம் பொதுவாக அதினம் இடம்பெறவில்லை. தமிழகத்தில் காணப்படும் முதல் உடும்பு ஓவியம் இதுதான். இப்பகுதியில் புதிய கற்காலத்திற்குரிய கல தடயங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் புதிய கற்காலக் கற்கருவிகள் குறிப்பிடத்தக்கவையாகும். இக்கற்கருவிகள் துணைக்கொண்டு நோக்கும் போது இந்தபகுதியில் புதிய கற்கால மனிதர்களின் தடையங்கள் காணப்பட்டாலும் இங்கு காணப்படும் பாறை ஓவியங்கள் பெங்கற்காலத்தைச் சோர்ந்தவை என்று நன்கு புலனாகின்றது. இதற்கு அருகில் பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**பாடியேந்தல்**

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூருக்கு அருகில் அமைந்துள்ள பாடியேந்தல் என்ற ஊரில் ஒரு குன்றின் குகைப்பகுதிகள் மற்றும் மேற்புறத்தில் வெண்மை மற்றும் சிகப்பு வண்ண ஓவிங்கள் தீட்டப்பட்டுள்ளன. தொல்பழயகாலத்தல் தரை விரிப்புக்களைப் பற்றிய அதிகச் செய்திகளைக் கொடுக்கும் பாறை ஓவியங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் இங்கு மான் தோல் போன்ற வடிவுடைய ஒரு விரிப்பைக் காணமுடிகின்றது.

**நாயனூர்**

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் தேவனூரை அடுத்துள்ள நாயனூர் மலையில் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வேவியங்களை முதன் முதலாக தமிழ்நாடு அரசு தொல்லியன் துறையின் திரு மா. சந்திரமூர்த்தி அவர்கள் கண்டுபிடித்தார். செங்காவி வண்ணத்தில் தீட்டப்பட்ட இவ்வோவியத்தில் பக்கவாட்டில் திரும்பிய நிலையில் பெரிய வரை ஆடு ஒன்றின் உருவம் காணப்படுகின்றது. இது மலைப்பகுதியல் வளரும் மலையாடு என்னும் வடிவத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. குறிப்பாக வரையாட்டின் ஓவியம் நாயனூரில் மட்டுமே கிடைத்துள்ளது. எனவே இவ்வோயிம் தமிழக பாறை ஓவியங்களில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. இங்கு ஆட்டின் உடற்பகுதி செங்காவி நிறத்தில்

கோட்டோவியமாகவும், உட்பகுதி வெள்ளை நிறத்திலும் தீட்டப்பட்டுள்ளது. மேலும் ஆலம்பாடி, கொல்லூர், புறாக்கல், செத்தவரை ஆகிய இடங்கயில் காணப்படும் ஓவியங்கள் இம்முறையிலேயே வரையப்பட்டுள்ளன

**ஆரோவில்**

சர்வதேச நகரமாக விளங்கும் இவ்வூர் வானூர் வட்டத்தில் பாண்டிச்சேரியிலிருந்து 15 கி.மீ தொலைவில் வடமேற்கில் அமைந்துள்ளது. இங்குள்ள பெருங்கற்கால ஈமச்சின்னங்களின் சிறப்புத்தன்மையினை அறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கல்வட்டம், ஈமத்தாழி, கற்பதுக்கை, கற்குவியல் போன்றவை கண்டறியப்பட்டன. சுண்ணாம்புப் பாறைகளைப் பயன்படுத்தி இங்கு கல்வட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனை அகழ்ந்த போது முட்டை வடிவ ஈமத்தாழியில் கருப்பு, சிவப்பு மட்கலன்கள் கண்டெடுக்கப்பட்டன. கற்பதுக்கையினை அகழாய்வு செய்தபோது முதுமக்கள் தாழியினுள் கருப்பு, சிவப்பு மட்கல ஓடுகள், இரும்பினாலான கோடரி, சிறு கத்தி, நீண்ட கத்தி, வாள் முதலியன தாழியினுள் வைக்கப்பட்டிருந்தது அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

**திருவக்கரை**

வானூர் வட்டத்தில் அமைந்துள்ள இவ்வூர் பாண்டிச்சேரியிலிருந்து 20 கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட போது கல்மரங்கள் மற்றும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் ஆகியன கிடைத்தன. இவ்வூரில் கல்மரங்களுக்கு அருகில் காணப்படும் மண்மேட்டுப் பகுதியில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட போது நான்கு இடங்களில் பெருங்கற்காலப் பண்பட்பாட்டுச் சின்னங்களும், ஈமச்சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. முதல் அகழாய்வில் கண்டறியப்பட்ட ஒரு புதைக்குழியில் ஈமத்தாழியை மூடுவதர்கான கல்பலகை மற்றும் பலகைக் கற்களும் ஆங்காங்கே காணப்பட்டன. இவற்றுடன் சொரசொரப்பான சிவப்பு மட்கலன்களும் கருப்பு, சிவப்பு மட்கலன்களும், இரும்பு பொருட்களும், அரிய கல்மணிகள் சிலவும், புதிய கற்காலக் கைக்கோடரி போன்றவையும் கிடைத்துள்ளன.

திருவக்கரையில் காணப்படும் கல்மரங்கள் இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்மரங்களாகிவிட்ட தாவரங்களின் படிமங்கள் ஆகும். 'ஜான்வாரிா்' மற்றும் 'சோனால்ட்' போன்ற ஆங்கிலேயர்கள் இப்பகுதியில் காணப்பட்ட கல்மரங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உலகப் புகழ் பெற்ற இக்கல்மரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய நிலப்பரப்பாய்வுத் துறை இங்கு 1951 ஆம் ஆண்டு தாவரப் பூங்கா ஒன்றினை நிறுவியது.

இரண்டாவது அகழாய்வு நடைபெற்ற இடத்திற்கு அருகில் தோண்டிய போது 4.75 மீ விட்டமுடைய கல்வட்டம் காணப்பட்டது இதனை அகழ்ந்த பொழுது கற்பலகைகள் காணப்பட்டன. இக்குழியில் மட்கலன்களுடன் கண்ணாடியால் ஆன மணியும் கிடைத்துள்ளது. நான்காவது ஈமச்சின்னம் கல்வட்டத்துடன் காணப்பட்டது இது இங்கு காணப்படும் ஈமச்சின்னங்களைவிட அளவில் பெரியது. இதன் விட்டம் 5.5மீ ஆகும். இதை அகழாய்வு செய்தபோது கருப்பு சிவப்பு மட்கலன்கள், கருப்பு மட்கலகன்கள், சொரசொரப்பான சிவப்பு மட்கலன்கள் மற்றும் வழுவழுப்பான சிவப்பு மட்கலன்கன் போன்றவை கண்டெடுக்கப்பட்டன.

**கொல்லூர்**

திருக்கோவிலுர் வட்டத்தில் பெண்ணையாற்றின் கரையில் அமைந்துள்ள கொல்லூர் திருக்கோவிலூரிருந்து 7 கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு பாறையின் மீது சிவப்பு வண்ண பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோயிங்கள் வரைகோடுகள் போன்று பல அமைப்புடன் காட்சியளிக்கின்றன. இப்பகுதியில் பெருங்கற்கால சின்னங்களும் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் பெருங்கற்கால கற்பதுக்கை செவ்வக வடிவில் அமைந்துள்ளது. இக்கல்லறை 2-மீ நீளமும், 1.10-மீ அகலமும், 1.35-மீ உயரத்தையும் கொண்டுள்ளது. இடுதுளையின் விட்டம் 0.30-மீ ஆகும். இக்கற்பதுக்கையின் அடிப்பகுதியிலும் கருங்கற் பலகை காணப்படுகிறது. இந்த கற்பதுக்கையானது சுற்றி கற்பலகைகளுடன் மேலே மூடிக்கல் கொண்டு மூடப்பட்டு முழுமையான தோற்றத்துடன் காணப்படுகிறது. இப்பகுதியில் கருப்பு, சிவப்பு பானை ஓடுகள் மற்றும் மட்கலன்கள் பொருங்கற்கால சின்னங்கள் போன்றவை காணப்படுகின்றன.

இதேபோன்ற தோற்றத்தினை கொண்ட பெருங்கற்காலத்தை சேர்ந்த கற்பதுக்கைகள் திருக்கோயிலூர் அருகே உள்ள தேவனூர் மற்றும் செஞ்சி அருகே உள்ள தேவதானம் பேட்டை மலைப்பகுதியில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தேவதானம்பேட்டை மலைப்பகுதியில் கள ஆய்வு மேற்கொண்ட போது புதியதாக பொருங்கற்கால வெண்ணிற பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

**நாயனூர்**

திருக்கோயிலூர் வட்டத்தில் திருக்கோயிலூர்-வேட்டவலம் சாலையில் தேவனூரை அடுத்து நாயனூர்

உள்ளது. இவ்வூரில் உள்ள அய்யனார் கோயிலுக்கு அருகில் காணப்படும் மலையின் பாறைகளில் பெருங்கற்கால ஓவியங்கள் செங்காவி வண்ணத்தில் தீட்டப்பெற்றுள்ளன. மிகப்பெரிய அளவில் ஆட்டின் உருவம் சிகப்பு வரிக்கோட்டில் வரையப்பட்டுள்ளதை காணமுடிகிறது. இங்கிருந்து சிறிது தொலைவில் அமைந்துள்ள வனத்துறைக்கு செந்தமான இடத்தில் பெருங்கற்காலத்தை சேர்ந்த ஏராளமான கற்குவைகள் காணப்படுகின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் காணப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் ஒரே இடத்தில் அதிகப்படியான ஈமச்சின்னங்கள் அருகருகே காணப்படுவது நாயனூரில் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**உடையாநத்தம்**

திருக்கோயிலூர் வட்டத்தில் உள்ள இவ்வூரின் வடமேற்கே உள்ள காட்டுப்பகுதியில் 10-அடி உயரமுள்ள பறவை போன்ற அமைப்பினை உடைய உருவம் ஒன்று காணப்படுகிறது. இப்பகுதி மக்கள் இதனை ‘விசிறிப்பாறை’ என்று அழைக்கின்றனர். பெருங்கற்கால மக்கள் வழிபாடு செய்த இறை உருவாக இது இருக்கலாம் அல்லது அப்பகுதியில் ஆட்சி செய்த தலைவனின் ஈமச்சின்னத்தினை பிற ஈமச்சின்னங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்ட இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சில அறிஞர்கள் இதனைத் ‘தாய் தெய்வம்’ என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தாய்தெய்வம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் வழிபட்ட ‘ஸ்ரீவஸ்தம்’ அதாவது பெண் தெய்வ வழிபாட்டின் முன்னோடியாக இருத்தல் வேண்டும் என்றும் கருதுகின்றனர்.

இவ்வுருவத்தைச் சுற்றி வட்ட வடிவமான கல்திட்டைகள் காணப்படுகின்றன. இவ்விடத்தைச் சுற்றிப்பெருங்கற்கால ஈமச்சின்னங்களான கற்பதுக்கைகள் காணப்படுவதிலிருந்து இத்தாய் தொய்வம் பெருங்கற்காலத்தைச் சார்ந்த நினைவுச்சின்னம் என்பதனை அறிய முடிகிறது. இதுபோன்ற அமைப்புடைய தாய்தெய்வம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மோட்டூர் என்ற இடதிலும், ஆந்திர மாநிரலத்தின் கோதாவரி ஆற்றங்கரையில் இரண்டு உருவங்களும் காணப்படுகிறது.

இறந்தவர்களை அடக்கம் செய்வது தொல்பழங்கால மக்களின் வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். மேலும் உலக நாடுகள் அனைத்திலுமே வாழ்ந்தப் பண்டைய மக்கள் இறந்தவர்களுக்கு மறுவாழ்வு உண்டு என கருதினர். எனவே இறந்தவர்களின் உடலை மரியாதைக்குரிய முறையில் பாதுகாக்க வோண்டிய நம்பிக்கை மிகுதியாக காணப்பட்டுள்ளதனை அவர்களது அடக்க முறையிலிருந்து அறிய முடிகிறது. சங்கம் மருவிய கால இலக்கியமான மணிமேகலையில் இறந்தவர்களின் சவ அடக்க முறையில் சுடுவோர், ஆழ்குழியில் புதைப்போர், தொடு குழியில் இடுவோர், சாதாரணமாக கல்பலகைகளால் மூடப்பட்ட கல்லறையில் புதைப்போர், கல்லறையில் ஈமத்தாழியில் உடலை வைத்து புதைப்போர், தாழியில் கவிழ்ப்போர் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே தமிழகத்தில் இறந்தவர்களை தாழியில் வைத்து புதைப்பற்கு ஏற்ப தாழிகள் பல வடிவங்களில் உருவாக்பட்டிருந்தன என்பதனை பல்வேறு இடங்களில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கலில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. இம்மாதிரியான முதுமக்கள் தாழியில் வயது முதிர்ந்தவர்கள், இறந்தவர்களின் உடலை தாழியினுள் வைத்து புதைத்தது மட்டுமல்லாமல் இறந்தவர்களின் உடலை எரித்து சாம்பாலையும், எலும்பையும் சிறிய கலையத்தில் சேகரித்து அவற்றை தாழியினுள் வைத்து அடக்கம் செய்துள்ளனர். இவ்வாறான தொல்பொருள் சான்றுகளின் வாயிலக தொல்பழங்காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த தொல்மாந்தர்களைப் பற்றி அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. மா.சந்திரமூர்த்தி, ‘நாயனூர்ப் பாறை ஓவியங்கள்’ விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கில் 27-5-1994 அன்று படிக்கப்பட்ட கட்டுரை.
2. முனைவர் இராசு. பவுன்துரை, தமிழகப் பாறை ஓவியங்கள், Baliga,B.S., South Arcot District Gazetters, Government of Madras, Madras, 1962.
3. Srinivasa Iyangar, P.T., Pre - Aryan Tamil Culture, Asian Education Services, New Delhi, 1985.
4. Narasimhaiah, B., Neolithc and Megalithic Culture in Tamil nadu, New Delhi, 1980.
5. Ramachandran, K.S., Neolithc Culture, Department of Archealogy, Madras, 1990.
6. இராசவேலு, சு., திருமூர்த்தி, கோ., தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள்,

பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, 1995.

7. குருமூர்த்தி, சா., தொல்பெருளாய்வும் தமிழர் பண்பாடும், சென்னை பல்கலைகழகம், சென்னை, 1995.
8. சுந்தரசண்முகனார், கெடிலக்கரை நாகரீகம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2001.
9. பிள்ளை, கே.கே., தமிழகவரலாறு மக்களும் பண்பாடும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.
10. தாமோதரன், கு., விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்ட வரலாறு, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1994.

*****